சைவ பரிபாலன சபை வெளியீடு.
ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணி மீ 28-ம் உ.

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவு பெற்றது

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1981 ... ...
PERIODICALS DIVISION
LIBRARY

# இந்து சாதனம்

Hindu Organ

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

பிரதி விலை : சதம் 40

மாசில் வீணையும் மாலை மதியமும்' வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் 92 ] யாழ்ப்பாணம்:- ரௌத்திரி ஸு பங்குனி மீ 3, 10-4-81 வெள்ளிக்கிழமை [ இல 36

நல்லை ஞானசம்பந்தர் ஆதின அறிக்கை:

## துர்மதி வருடப்பிறப்பு

இந்தியாவில் தருமபுர ஆதினம், காஞ்சிகாம கோடிபீட சங்கராசார்ய சுவாமிகள் மடம், திருப்பனந்தாள் ஆதினம் ஆகியன இந்திய அரசாங்க பஞ்சாங்கப்படி 1981 - 4 ம் மாதம் 14-ந் தேதி செவ்வாய்க்கிழமையே புதுவருடத்தைக் கொண்டாடுவதெனத் தீர்மானித்துள்ளன. ஆகவே இலங்கையிலுள்ள ஆலய முகாமையாளர்களும், பொதுமக்களும் இதனைப்பின்பற்றுவது சிறந்ததென அறியத்தருகிறோம். மட்டுவில் திருக்கணித பஞ்சாங்கமும் இலங்கைசோதிட ஆய்வு மன்றமும் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளன.

இங்ஙனம்

ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாசார்ய சுவாமிகள்
நல்லை ஞானசம்பந்தர் ஆதினம்
யாழ்ப்பாணம்.

1-4-81.

## குளிர்த்தி அபிஷேகம்

யாழ்-வண்ணை கிணர்வேலிக் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சர்வசக்தி ஸ்ரீ மகாமாரி அம்பாளுக்கு பங்குனி மாதம் 1ந் திகதி [14, 3. 81] சனிக்கிழமை தொடக்கம் சித்திரை மீ 1ம் திகதி புதுவருடப் பிறப்பு வரை தினமும் நண்பகலில் விசேட அபிஷேகமும் பூசையும் நடைபெற்று வருகின்றது. புது வருடத் தினத்தன்று அம்பாள்வீதி உலாவும் மறுநாள் விசேட குளிர்த்தியும் இடம் பெறும்.

# திருக்கோணேஸ்வரம்
# புனித நகராகப் பிரகடனம்

இந்துக்களின் வழிபாட்டுத் தலமான சரித்திரப் பிரசித்தி பெற்ற அருள்மிகு கோணேஸ்வரத்தின் கீர்த்திக்குரிய கௌரவிப்பாக கோணேஸ்வரச் சூழலினைப் புனிதநகரமாக, எங்கள் மாண்புமிகு பிரதமர் பிரேமதாசா அவர்கள் பிரகடனஞ் செய்வித்துள்ளார்.

அண்மையில் இவ்வாலயத்துக்குரிய புள்மலைப்பிள்ளையார் கோவிலின் விக்கிரகம் அப்புறப்படுத்தப்பட்டதும், அவ்விடத்தில் பௌத்த கோவில் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதும் திருமலை பா. உ. இரா. சம்பந்தன் அவர்களும், ஆலய பரிபாலகர்களும் பிரதமரைச் சந்தித்து முறையிட்டதும், திருமலைக்கு நேரடியாக விஜயஞ்செய்து ஆலயபரிபாலகர்கள் சமர்ப்பித்த, உறுதிகள் நிலஅளவைப் படங்கள், உள்ளிட்ட சகல தஸ்தாவேஜுகளையும் ஆய்ந்து அவற்றிலிருந்து தெட்டத் தெளிவாக அவ்விடம் கோணேசராலயத்துக்கே உரியதெனத் தெளிந்து வேறெவர்க்கும் அங்கு உரிமையில்லை என்று தீர்ப்பு வழங்கிய தன் மூலம் மாண்புமிகு பிரதமர் அவர்கள் உண்மையின் பாதுகாவலனு கத்தன்மை நிரூபித்துக் கொண்டதும் சைவ நன்மக்கள் யாவரும் அறிந்த செய்தி,

இச் செங்கோன்மைக்கும், மேலும் கோணேஸ்வரத்துக்கும் புனித நகர அந்தஸ்து வழங்கி, அதனைப் புனித நகராகப் பிரகடனஞ் செய்வித்த அவர் தம் மனப்பாங்கிற்கும் சைவ உலகம் என்றென்றும் வணக்கம் செலுத்தும் என்பதையும். அன்னாரை சைவ சமய ஸ்தாபனங்கள் யாவும் வாழ்த்தி நிற்கும் என்பதையும் இந்துசாதனம் உறுதியாகக் கூறிக்கொள்கிறது.

---

நோக்கிலும் இருந்தன என்பதை அத் தவசிரேட்டர் அமைத்த ஆலய நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றுப் பத்தி உணர்ச்சியாற் கட்டப்பட்டிருந்தவர்கள் நன்கறிவர்.

பரமேசுவரக் கல்லூரியில் உள்ள பரமன் கோயில்; இராமநாதன் கல்லூரியில் இலங்கும் இறைவன்பேரில்லம். இவை ஒருபுறம். பொன்னம்பலவாணேஸ்வரத் தேவத்தானத்தின் திரு இன்னொருபுறம், இங்கெல்லாம் சைவசமயியின் ஒழுக்கநெறி எப்படியிருத்தல் வேண்டுமென்ற நிகழ்ச்சிகளே நிறைந்திருந்தன.

பூசைசெய்யும் முப்புரிநூலாரின் சிவப்பொலிவொன்றே போதும் புராந்தகன் இக்கோயிலில் அருள்பரப்புகின்றான் என்பதற்கு.

வேதமந்திர விற்பன்னர்கள், இவர்கள் சிவாகம சாத்திர தெளிவுள்ள தேசிகர்கள், இவர்கள் பூசைப் பொழுதில் இங்கு இமைப்பொழுதேனும் கண்ணுறும் புண்ணியம் பெற்றவர்கையிலயங்கிரியின் கவினைக்கண்டவர் போலாவர்,

தூபதீபங்களில் உள்ளது தலக்கம, தூய மலர் தரும் தூய்மை, பூசைமணி ஒலியின் பொலிவு, பரஞ்சோதிக்குரிய சோதி வடிவத்தைக் காணக் கண்கள் கணக்கில வேண்டும்.

இவையாவும் இராமநாதவள்ளலின் நேர் பார்வையில் நியமமாகத் திகழ்ந்தனவென்றால் இலட்சியபுருடரின் இலட்சிய எழில் தான் என்னே!

வேத மந்திரங்களின் நாதம் அவற்றிற்குரிய இலக்கணத்துக்கமைதல் வேண்டும். திருமுறை ஓதுதல் குரவர்கள் தந்த பண்ணமைப்புக்கமைய வேண்டும் இராமநாத வள்ளலின் வேண்டுகோள் இவை.

# இராமநாத இலட்சியம்

முன் வளர்ச்சி - 4

சிவாலயங்கள் அமைப்பதற்கு முற்பிறப்புகள் பலவற்றிலே தேடிய புண்ணியச் சேமிப்பு இருத்தல் வேண்டும். இத்தகைய பூர்வீகப் புண்ணியப் பொலிவு இராமநாத வள்ளலுக்கு அமைந்திருந்ததை எடுத்துக் காட்டும் வேறு நிகழ்ச்சிகளும் அன்னாரின் வாழ்க்கையில் நியமமாக அமைந்திருந்தன என்பதை ஈண்டு எடுத்துக்கூறுதல் பொருத்தமாகும்.

ஆலயம் அமைத்துவிட்டால யாவும் அமைந்துவிட்டனஎன்பது அர்த்தம் அல்ல; கோயில் கோயிலாகக் கோலங் கொள்ளுதல் வேண்டும். முப்பொழுதும் திருமேனி தீண்டுவாரின் செம்மை; நித்திய நைமித்தியங்களுக்கு நிகழவேண்டிய கிரியைக் கிரமச் சிறப்பு, பரஞ்சோதியெம் பரமன் என்பதை விளக்கும் வகையில நெய் விளக்கு அணி செய்யும் ஒழுங்கு, வேதம் ஓதுதல், திருமுறை ஓதுதல், பண்ணிசை பரப்புதல், திருநீறு, சந்தனம், குங்குமம் அடியார்களுக்கு வழங்கும் முறைமை. ஆலயச் சூழலின் புனிதம் இவை யாவும் இராமநாத வள்ளலின் எண்ணத்திலும்

# அருட் செல்வம்
# அனைத்துயிர்க்கும்
# அளிக்கும் அன்னை

## துர்க்கையெனும் மூர்த்தமாய்த் தெல்லியிலே தோற்றம்



"தில்லைச் சிற்றம்பல மேய செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே" என்ற திருஞானச் செல்வரின் அருங் கருத்துக்கமைய அத் தில்லையுளான் மூர்த்தமாய்த் தெல்லி நகர் மேய செல்வி துர்க்கை தாயவடி தொழுதேத்துஞ் செல்வமே செல்வம் என்ற உண்மையை ஒப்பில்லாத உண்ணாமுலையுமையாள் அடியார்கள் பல்லாயிரக் கணக்கானோர் தங்கள் சொந்த அநுபவமாக உணர்ந்திருக்கின்றார்கள் என்பது இந்த ஆன்மாக்களின் அயராத அர்ச்சனைகளால் இன்று பெருங்கோயிலாகப் பரிவாரப் பொலிவுடன் விண்பரவும் இராசகோபுர எழிலுடன் விளங்கும் துர்க்காதேவி ஆலயம் ஏற்ற சான்றாகத்திகழ்கின்றது.

'தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு'

என்பது பொய்யாமொழி. இப் பொருட் பொலிவின் உள்ளடங்கியன: ஊற்று மணல், தோண்டுதல் ஊக்கமும் அதனால் புகழும் ஆக்கமும் ஆம்.

கற்பரிர் இலா இடம் நீருற்றுக்குன்றும் என்றும் சமசிவாயப்புலவரின் யமக அந்தாதியில் ஓர் இடம் வருகின்றது. பாறைக் கல் வழியாக நீர் ஊறும் என்று கற்பெனும் கல்வழியாக நீர் ஊறும் என்றும் கற்பெனும் பொற்புடைய பொற்கொடியார் பொலியுமிடத்தில் ஊற்றுக்கு குறையிராதென்றும் செய்யுள் நயம் பெய்யும் புலவரின் கருத்தும் இவ்விடத்திற் சிந்திக்கப்பாலது.

துர்க்காதேவி எழுந்தருளியிருக்கும் தெல்லிமா நகரில் உழுகுடைக்குறிச்சியில் அருள் நீர்ஊற்றுக்குரிய தகைமைகள் உண்டெனபது இத்திருத்தலத்தின் உத்தம நிலைமையிலிருந்து பெறப்படும் தெய்வகடாட்சம் என்னும் அன்பு நீர் ஊறுவதற்கு அச்சூழல் கற்புக்கிடமாக வேண்டும். சொற்றிறம்பாமை கற்பு இத்தகையநன்னெறிச் சூழல் இங்குள்ளதென யாருமறிவர். கற்பெனும திண்மை காரிகையருக்குமட்டுமன்று நேர்மை ஆடவருக்குரிய நெறி, துர்க்கா அருட்பெரய்கை வற்ரு வாவியானமையினலன்றோ சைவஉலகத்திலே உள்ள தெய்வீகத் தானங்களில் இத் தலமும் முன்னணியில் நிற்கின்றது.

கற்புடையாரிடம் கற்றோர் பொலிந்தாற் பொற்பின் பொருளினைப் பேசவும் வேண்டுமோ. மெய்ஞ்ஞானம் கற்றுணர்பவர்களையே உலகம் கற்றோரென்றுரைக்கும் திருமுறை ஓதுதல் புராணபடனம் செய்தல் சித்தாந்த சாத்திரங்களைச் சிந்தித்தல் ஏழைசைநயத்தைச் சூழலைத்தல் இவையெல்லாம் துர்க்காபுரத்திற்குரிய தூயபண்பாகும்.

வேதசிவாகம வித்தகர்கள் விதிமுறை வழுவாது சிவாசாரியாகக் கிரியைகள் செய்யும் சிறப்பினைக்காணபோர் திருக்கைலாய பரம்பரைச் சிறப்பினைக் கண்டு களிப்பர்,

( வளர்ச்சி 3 - ம் பக்கம் )

## காரியாலய விடுமுறை

புதுவருடப் பிறப்புத் தினத்தை முன்னிட்டு நாளைவேளை 15.4.81 புதன்கிழமை நடைபெற இருப்பதால் 14.4.81 செவ்வாய்க்கிழமை எமது காரியாலயம் மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

அதிபர்

சைவப்பிரகாச அச்சகம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்கு
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ரௌத்திரி ஸ்ரீ பங்குனி மீ 3, 10-4-81 வெள்ளி


## ஆண்டு முடிவடைய ! ஆண்டு முடிசூட !!

தோன்றியன துஞ்சும் துஞ்சின தோன்றும். இது பெருந் தத்துவ ஞானம், சைவசமயிகள் இதன்பொருளை நன்கறிவதற்கு மெய்கண்ட சாத்திரங்களும் திருமுறைகளுந் துணைபுரிகின்றன.

ஆக்கமும் அழிவும் ஒன்றேடென்று நோக்கிவண்ணம் தொடரும். இந்த இயற்கையை என்னென்று கூறுவது,

இந்த ஆண்டு நந்த தொன்று மில்லை. இனி வரும் ஆண்டு நன்சிறப்புடையதாகட்டும் என்றே ஒவ்வோராண்டின் ஈற்றிலும் நாம் உரைத்து வந்திருக்கின்றோம்.

மனிதனின் பெரியபண்பு! எல்லாம் நன்மைக்கே என்று பழகி ஒழுகுவதே ஒரு பொல்லாப்பும் இல்லை என்று உறுதிமொழி சொன்னார் யோகர்சுவாமிகள்.

இவ்வாறு எல்லாம் இன்பமாய் இருப்பதற்கு ஏதுவாகவுள்ளதை எங்கள் குரவர்கள் எடுத்தியம்பியிருக்கின்றனர்.

நற்றுணையாவது நமச்சிவாயவே என்று துணைதேடுபவர்களுக்குத் தோன்றுந் துணையை அப்பர் அடிகளின் இவ்வடியிலிருந்து அறிகின்றோம். அறுவ அறிந்தும் அத்துணையை நாடுகின்றோமில்லை.

அல்லல் என்செயும் அருவினை என்செயும் என்று அஞ்சா நெஞ்சத்தை ஊக்குவித்த குரவர், சிற்றம்பலவனார்க் கெல்லையில்லதோர் அன்பு பூண்டேனுக்கே அது என்று வழிகாட்டினார்.

நாம் அன்பை நமச்சிவாயத்துக்காக்காது, உலகமுழுதுக்கல்லவா சேர்கின்றோம். அப்படியானால் ஆண்டுசென்றதும் ஆண்டு புதியதாய் வருவதும் என்ன மாற்றத்தைக் கொடுக்கும்,

என்று நாள் சித்திரைக்கென்று தடுமாறுகின்றோம். இதுதான் பொருத்தமானதென்றறிந்து விட்டாற்போதுமா, பொருத்தமான வேளையிற் சமயப் பொருதத்மான நெறியைக் கடைப் பிடித்திருக்கின்றோமா

ஆசறு நல்ல அவைநல்ல அடியார் அவர்க்கு மிகவே என்று திருஞானப் பெரியார் கூறியதன் பொருளை மறியாது கிள்ளைபோற் சொல்லி ஆறுதல் அடைவதாக அமைகின்றோம யாருக்கு நாள் எல்லாம் நல்லநாள் — அடியார் அவர்களுக்கல்லவா

ஆண்டு நன்றாக அமைய வேண்டின் சொல்லுதும் நெறியை, கொல்லாவிரதம் பூணுமின் கோவினத்தைப் பேணுமின்.

## எதிரணியும் மதிப்புவைக்க வாழ்ந்த ஏந்தல் கதிரைவேற்பிள்ளை



குணநலனையே கொள்கையாகக்கொண்ட அரசியற் சூரிசில்களுள் ஒருவராகத்திகழ்ந்த திருவாளர் சிவசுப்பிரமணியம் கதிரவேற்பிள்ளை அவர்கள் விண் செல்லும் வேளையில் விட்டுச்சென்ற கொடை அரசியலில் அமைந்திருப்பவர்களுக்கு நடைமுறை எடுத்துக்காட்டாகப் பயன் கொடுக்கும் தமது குணாதிசயமே;

உள்ளத் தூய்மை ஒருவருக்குளதாகில் வையகம் வாழவைக்கும் வழி வகுக்கும் தகைமை அன்னாரிடத்திலேயே அமைந்திருக்கும்.

கலை ஞானம் பெற்றவர்கள் எல்லோருக்கும் அவர்கள் உள ஞானம் நன்னிலையில் உண்டு என்று உலகம் சொல்லமாட்டாது,

கற்றவர்கள் என்று காசினி மதிப்பது மெய்யறிவுதுலங்க வாழ்க்கையை நடத்துபவர்களையே.

சொல்லும் செயலும் ஒன்றுக்கொன்று முரணாகில்லாத நிலைமை எங்குண்டோ அங்கேதான் கல்வியினுல் எழுந்த குணநலம் இருக்கும்,

பல்கலைக் கல்வியில் விஞ்ஞானக் கலைமாணியாகப் பல்லாயிரவர் இந்நாட்டில் இருக்கின்றனர்; எனினும் இந்த மாண்பின் பயன் இவர்கள் செயற்திறனில் இருக்கின்றதா என்பதே கேள்வி- இவ் வினவுக்கு ஏற்ற விடை பகருவான் போன்று வாழ்ந்து வழிகாட்டியவர் திரு. கதிரைவேற்பிள்ளையவர்கள்,

வாழ்க்கையின் இலக்கணத்தை வள்ளுவனார் குறள் நாலில் வகுத்திருக்கின்றார்; இந்த இலக்கணத்துக்கேற்ற இலக்கியமாகத் திரு. கதிரைவேற்பிள்ளை அவர்கள் இவ்வுலகில் இயங்கி வந்தனர்.

இந்த விதமான உன்னதம் இவர்களுக்கு இயைந்ததெங்ஙன் என்று சற்று ஊன்றி எண்ணுங்கால் இவர்களின் தந்தை தாயர் இரு மரபுங்குணநலத் தூய்மை வாய்ந்தவர்கள் என்பது தெற்றெனத் தோன்றும்- இந்நாட்டின் சைவசற் சங்கங்கள் யாவற்றிலும் ஏற்ற பொறுப்பேற்றுப் பணி புரிபவரும், இந்துசாதனத்தின் வெகுநாள் கட்டுரையாளரும் ஆகும் திரு. க. சிவசுப்பிரமணியம் அவர்களின் அருந்தவர் இவர் என்றாற் பண்புப் பரம்பரை ஒன்று இங்குண்டு என்பது தெளிவாகின்றது,

இத்தகைய பெருமைக்குரித்தான திரு. கதிரைவேற்பிள்ளை அவர்கள் நற்றமிழ் வல்லவர், நற்சிந்தனையுடையவர், கற்றதுகைம் மண்ணளவேயென்று மேலும், கற்றுக்கொண்டிருக்கும் அறிஞர், கற்றைவெண் சடையண்ணல் கண்ணுதற் கடவுளை உற்றபடி வணங்கும் அமைதியாளர்.

தாய்மொழிப் பற்றுமேயதன் மையினுல் அரசியலில் பிக்கார்வம் கொண்டவர் பெற்றமொழி நற்றவரானிலும் பெற்றியுடையதென்ற பேருணர்ச்சி கொண்டவர்.

கொல்லாவிரதம் பூண்டவர்; எனவே புனிதவுணவும அவ்வழிப் புனித எண்ணமும் கொண்டவர்.

யாருக்குந் தீங்கு நினையாச் சீரியர் பழந்தமிழ்மரபுக்கிணக்கத் தர்மபத்தினியுடன் வளமாக இல்லறம் புரிந்தவர். நன்மக்கட்பேற்றுக்குரியவர்.

நல்லார் இவர், பொல்லா உலகுக்கு இவர் பொருந்தாரென்று நல்லான் திருவடிநிழலிற் சென்று விட்டார்.

சாந்தி

## தொண்டர் தம்பணியினுல் விளங்கும் துர்க்காதேவி திருத்தலம்

அன்று அரசர்கள் ஆலயங்களைப் பேணி அரசு புரிந்தார்கள்; திருப்பணிகள் செய்வித்து நாடெங்கும் ஈசனுர்க்கெழில்மிகு கோயில்களைத் திகழவைத்தார்கள், பொன் வழங்கிப் பொருள் கொடுத்துப் புனித தலங்களை நன்னிலையில் வைத்தார்கள் மன்னர்கள்.

இன்று அங்கிலை இன்று, இருந்தும் திருத்தலங்களிற் சில பொலிவிற் பெருந்திருக்கின்றனவே; இதற்கு ஏதுவாகின்றவர்கள் யார் ?

தெல்லி மாநகரிலே உமு குடைப் பதியென்று அழைக்கப்படும் சிறியதோர் குறிச்சியுண்டு, பல நூற்றாண்டுகளுக்குமுன் அங்குள்ள அந்தணப் பெருந்தகையினரின் ஆதரவுடன் அடியார்கள் சிலர் துர்க்கையம்மனுக்குக் கோயில் எழுப்பினர். நிலம் வழங்கினர், நெல்லும் நெய்யும் நிவேதனத்துக்குரியன பிறவும் கொடுத்தனர். அம்பாள் கோயில் அலங்காரமாயமைந்தது. அம்பு தொடுக்க மாவை ஆறுமுகத்தையன் அம்பாள் ஆலயத்துக்கு எழுந்தருளும் பெரு நிகழ்ச்சியும் நடைபெறுவதாயிற்று,

அமைத்த அடியார்களின் அடிவந்தவர்கள் அயர்ந்தனர். உயர்ந்ததும் அயர்ந்தது,

காலமும் கழிந்தது. முற்றெடர்பின் பற்றினுல் புதிய அடியவர்கள் உதித்தார்கள்; புனர்உத்தாரணம் செய்விக்கத் தொண்டு புரிந்தனர், கோலம் மெல்ல மாறியது. குதூகலம் உண்டாயிற்று- குழாமாக அடியார்கள் கூடினர். நாளுக்கு நாள், இல்லை நாழிகைக்கு நாழிகை அம்பாள் அரசாட்சி பரவத்தொடங்கியது, அத்துடன் தோன்றியது தொண்டர் அணி ஒன்று. ஆலய நிர்வாக அன்பர்களின் ஆர்வமும் அவர்களைச் சுற்றி அமைந்த அடியார்களின் அபிமானமும் ஒன்றுதிரண்டு திருப்பணி உருவெடுத்தது,

திட்டமிட்டுச் செய்தாலும் சிறப்புற முடியாதமட்டத்தில் இந்த நிர்வாகஅன்பர்களும்,தொண்டர் குழாமும் செயற்பட எழுந்தன. திருவாசகம் நினைக்க நீள் அணியாம் தொண்டர்கள் குருசிட முறையிற் கருமஞ் செயத் தொடங்கினர்,

வான் புகழ் தோன்றியது; துர்க்காதேவியின் அர்ச்சனையே மக்கள் தங்கள் பிணிக்கு மருந்தென நூற்றுக் கணக்காகக் குவிந்தனர். ஆயிரம் ஆயிரமாக அடியார் தொகை விரிந்தது.

கோயில் அமைப்பின் திருக்கோலத்துக்கமைய ஆண்டு மாவிழாக்கள், நவராத்திரி, தேவி வழிபாடு முதலியன பொலிந்தன.

சித்திரத் தேர் ஒன்றிருந்தாலென்ன என்று இந்த அமைப்பாளர்கள் சிந்தித்தார்கள், செயலாய் உருவெடுத்துச் சிற்ப நுணுக்க அணிகலனுய் அமைந்தது தேர்,

கோயில் அழகு கோபுரத்தில் அல்லவா ? என்று நேயர்கள் கிளைத்தார்கள். ஆயபடி அமைக்க அறிஞர் தபதியும் அன்னையின் அருளால் அன்னை அகத்திருந்திலண் வந்தனர்.

அன்பும் அருளும் ஒருங்கமைந்தால் அமைவது அரும்பெருந் திருவே. அங்ஙன் வான் அளாவும்அழகிய திருக் கோபுரமும் எழுந்துவிட்டது.

ஆலயத்துக்கு அடியார் மடம் அமைய வேண்டும் அல்லவா — அவ்வாறுனது. அன்னம்பாலிப்பு இருக்க வேண்டுமே, அதுவும பொலிகின்றது.

நீர்நிலைகள் நந்தவனங்கள் இவற்றின் சீரும் தாமாகத் திகழ்ந்தது,

அந்தணர் வாழ் இல்லம். ஆம், இதுவும் அமைந்து விட்டது,

பூரணப் பொலிவுடன் பொன்னழகி மின்னனைய அன்னை துர்க்கை அருள் ஆட்சி ஓங்குகின்றது,

இந்த இயக்கத்தின் செம்மை இரகசியம் என்ன சொல்லுதும். தொண்டர்கள் தோள் வலிமையாம் அன்னையே,

இரவு பகல் இறைவியின் பணிசெய்யும் தொண்டர்களின் தூய பணியே,

மண்சுமந்து, கல்லுடைத்து உண்பதையும் உறங்குவதையும மறந்து திருப்பணி செய்த இயக்கத்தின அணியே.

## மீள விளம்புவதேன் மேல்!

'துன்மதி' என்றபெயர் தொட்டுவரும் புத்தாண்டே!
நன்மதி கூடூக நாதனர் — புன்மதி
யாளர் அறிவுபெற, அன்றணிந்தார் தோரயோ!
மீள விளம்புவதேன் மேல்!

## படகும் பழி பாதகமும்

எந்தவகையிலும் பணம் பெறுவதே இலக்காகவுள்ளவர்கள் இதயத்தில் இரக்கமோ மனச்சான்றுக்கு அச்சமோ இருக்குமென்று எவரும் எண்ணமாட்டார்கள்.

பொதுவீதிகளிற்போக்குவரத்துச் சாதனங்களாக இயங்குகின்ற விசை இயந்திரங்களைச் செலுத்துகின்றவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள் என்பதை இந்த வீதிகளிற் பயணம் செய்வோர் அறிவர்.

ஒவ்வொருநாளும் வேகத்துக்கும் விபரீதபுத்திக்கும் ஆளாகின்ற விபத்துகளையும் அவற்றின் பின்னும் அதேவிதமாக ஆபத்துநிகழ்வதையும் காணுகின்றோம்.

ஆனல் ஒரு விதமாகவேனும் மனிதன் திருந்துவதாகக் காணவில்லை.

தான் மாத்திரம் சீவிக்கவேண்டும் அதற்காக எந்தத்தகாத செயலையும் செய்யலாம் செய்துவிட்டுச் சட்டத்துக்கும் பிடிபடாமலிருக்கலாமென்ற எண்ணம் இந்தச் சுயநலப்புலிகளிடம் பரவிவருகின்றதை இன்னமும் சமூகம் பார்த்துக் கொண்டு கைகட்டியபடி இருக்கலாமா.

இது தரையிலே இனிக கடலில் என்ன அசப்பாவிதங்கள் நிகழ்கின்றன என்பதைக் கவனித்தால் அங்கும் பயணம் செய்வோருக்கு அதோகதிதான்

பத்துப்பேர் பயணஞ் செய்யக்கூடிய படகில் இருபதுக்கும் மேலான எண்ணிக்கையில் ஆட்கள்செல்வதென்றல் ஆபத்தைவரவழைப்பதென்பதே இந்த அடாத்தான செயலின் நோக்கமாகும்.

இந்த விபத்து இதயத்தைத் தொடுவது மட்டுமன்று இதயத்தையே அசைத்து விட்டதென்றே சொல்லலாம். ஆனல் இந்த இயம வேட்டையிற்பங்கு பற்றியவர்கள் பல திறப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திரைகடல் ஓடியும் திரைப்படம் பார்க்க முயன்றவர்கள் ஒருசாரார்.

அத்தனை பேர் களையும் ஒரு சின்னஞ்சிறு வள்ளத்தில பஞ்சடைந்த மாதிரிப் புகுத்தி வள்ளம ஓட்டியவரும உதவியாளர்களும ஒரு பக்கம் பாரந்தாங்காது பரதவித்த படகு குடையடிக்கப்போகும் அறி குறியைக் கண்டும் அந்த ஆபத்தை நிச்சயமாக்கும் வகையில் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் பாய்ந்தவர்கள இன்னொருபக்கம் மார் வார்

எவ்வளவு தூரம் இந்த விபத்துக்குக் காரணர்களானார்கள் என்பது ஆராயப்பட வேண்டும் அதேவேளையில், இன்னம் ஒன்று அவசியமாக ஆராயப்பட வேண்டும்.

வள்ளம் படகு தோணி கப்பல் என்ற பல திறப்பட்ட வாகனங்கள் கடல் மீது போக்குவரத்துச்சாதனங்களாக அரசாங்க உத்தரவு பெறப்படும் கட்டளைச்சட்டம் மிசநுணுக்கமாக ஆராயப்பட வேண்டும் உத்தரவு பெற்றவர் இந்த வாகனங்களை ஓட்டுபவர்களாயிருக்கின்றர்களா?

இந்த வாகனங்களிலே பயணம் செய்யக் கூடியவர்கள் உச்சவரம்பு என்ன என்பது இவற்றிலே பிரசித்தமாக எழுதப்பட்டிருக்கின்றதா?

இந்தச்சட்ட ஒழுங்குகள் நடைமுறையிற் கவனிக்கப் படுகின்றனவா?

கவனிப்பதற்குரிய அலுவலாளர் யார்?

இந்த விசாரணையே மிக மிக அவசியமானது.

இதுபகிரங்க விசாரணையாயிருத்தல் வேண்டும்.

பொதுமக்கள் விசாரணைக்கழைக்கப்படல் வேண்டும்

இனிமேலும் இந்தவேதனையான விபரீதம் நிகழாமல் அரசாங்கம் உடனடியாக ஒழுங்கெடுத்தல் அத்தியாவசியம்.

## பேராசிரியர் ஔவை துரைசுவாமிப்பிள்ளை இப்பிறவி துறந்தார்

சித்தாந்த கலாநிதியாகவும் செந்தமிழ் நூற் புலமைச் சீலராகவும் திகழ்ந்த பேராசிரியராக விளங்கிய ஔவை துரைசுவாமிப்பிள்ளை அவர்கள் மதுரை மாநகரில் சென்ற வெள்ளிக்கிழமை காலமானர்.

வயது 79 ஆகியும் மொழிப் பற்றின் பேரீட்டினுல் அயரா துழைக்கும் ஆற்றல் பெற்ற வண்ணம் இறுதிவரை உழைத்தனர்.

பதிற்றுப்பத்து முதலிய பல பழந்தமிழ் நூல்களுக்கு அரிய உரைவகுத்தஅறிஞரான இவரை உரைவேந்து என்று உலகம் பாராட்டியுள்ளது.

பல துறைகளிலிருந்து மொழிக்குப் பணியாற்றிய பேராசிரியருக்குப் பல அறிஞர்கள் அஞ்சலி சென்னை வானெலி மூலம் செலுத்தினர். இவர்கள் ஆன்மா அமைதியாகுக.

புது வெளியீடு

### "திருவருள்"

"திருவருள்" என்னும் திவ்விய நாமத்தோடு சைவசமய சஞ்சிகை ஒன்று தொடங்கப்பட்டு ஒழுங்காக வெளி வந்து கொண்டிருப்பது குறித்து சைவ உலகம் மகிழ்ச்சியடையாமல் இருக்கமுடியாது. கொழும்பி லுள்ள பிள்ளைமார் திருவயதர்மஸ்தாபனத்தின் திருவருள் தொடர்ந்து வெளிவரக் கூடிய நிதிப்பின்னணி கொண்டிருப்பதாகத் தெரிகிறது. கடந்த இரு இதழ்களிலும் பத்திரசுவையையும் பக்தியுணர்வையும் தூண்டும் சக்திவாய்ந்த கருத்துக் கருவூலங்களான கட்டுரைகள் மணி மொழின உடைமை பெற்றுச்சைவ மணம் கமழ்கின்றன.

பண்டிதமணி இலக்கியகலாநிதி கணபதிப்பிள்ளை அவர்கள் சுவாமி சின்மயானந்தா, தவத்திரு குன்றக்குடி அடிகள் நல்லையாதீனம் பரமாசாரிய சுவாமிகள் முதலிய சமயஞானிகளின் ஞானச்சுடரின் ஒளிர்ந்து வரும் திருவருள் முதல் இதழ் சென்ற 12-12-80 அன்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுச் சிவநெறிக்காவலர் கலாநாசர அவர்களால் முதற் பிரதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

தெல்லிப்பளையில் சென்னை மயிலாப்பூர்

## சைவ சித்தாந்த சமாஜப் பவள விழா

—○—

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய தேவஸ்தானத்தில் இவ்வாண்டு மே 8, 9, 10 ஆம் திகதிகளில் தென்னிந்திய சைவ சித்தாந்த சமாசத்தினது பவள விழா வினைக் கோலாகலமாக நடாத்த உள்ளது என்பது இச் சமாசத்தின் 'சைவ சித்தாந்தம்' என்னும் சஞ்சிகையில் வெளியாகிய முக்கிய அறிவிப்பிலிருந்து தெரிய வருகிறது. இவ் விழாவிற்கு ஏராளமான சமாச உறுப்பினர்களும் சைவநன்மக்களுமாகப் பல நூற்றுக்கணக்கானோர் யாழ்ப்பாணம் வர உள்ளார்கள். தமிழகச் சைவப் பேரறிஞர் பலர் விழாவில் கலந்து சொல்மாரி பொழிய உள்ளனர்.

சைவத்தின் நிலைக்களமாகவும் சிவநெறி ஒழுக்கத்தின் களஞ்சியமாகவும் விளங்குவதும் "சிவபூமி எனத் திருமூலநாயனரால் ஏத்தப் 'பற்றதமான ஈழத்து யாழ்ப்பாண மண்ணில் சைவசித்தாந்த சமாசத்தின் பவளவிழா நிகழவிருப்பது பொருத்தமான கீர்த்தியாகும். துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் கீர்த்தி மிகு வைத்தொண்டின் பெறு பேறு இது என்றேகூறவேண்டும்

இத்தகைய சைவவிழா ஒன்றினுல் மிகக்கூடுதலான பயனை அனுபவிக்கக்கூடிய மிகநெருக்கமான இந்தச் சைவக்குடிப்பரப்பிலே இவ்விழா இடம்பெறுவது விழாவின் நூறுவீதவெற்றிக்கும் காலாகிறது. யாழ்ப்பாணச் சைவஉலகம் கொடுத்து வைத்தது என்று களிப்போமாக.

## விசேட தீட்சை பெறும் வித்தகத் திருமதி

சில தினங்களுக்கு முன் கொக்குவில் பண்டிதை திருமதி ச. அமிர்தாம்பிகை B.A அவர்கள் கரணவாய் ஆதீனம் ஸ்ரீமத் சைவ திருஞானசம்பந்தக் குருக்களிடம் விசேட தீட்சை பெற்றுச்சிவபூசை எழுந்தருளம் பெற்றுள்ளார். இவர் உரையாசிரியர் மட்டுவில் ம. க. வேற்பிள்ளை அவர்களுக்கும் சைவப் பெரியார் அ. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் பேர்த்தியுமாவார்.

## கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரின் இறுதி யாத்திரை

பெருந் தொகையான மக்கள் யாழ்ப்பாண நகர் மண்டபத்தில் அஞ்சலி செலுத்திய பின் திரு. கதிரவேற்பிள்ளை அவர்களின் பூத உடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சிறு சிரியையுடன் தகனம் செய்யப்பட்டது. நகர மண்டபத்தில் பிரதமர் பிரேமதாசா அமைச்சர்கள் தொண்டமான் ஜெவிடிமெல் உட்படப் பலர் இரங்கல் உரையாற்றினர். திரு அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஈற்றில் உரையாற்றி மறைந்த தலைவரை என்றுமே மறக்க முடியாதென்றனர். அஞ்சலிக் கூட்டத்திற்கு நகர முதல்வர் இராசா விசுவநாதன் தலைமை வகித்தார்.

## அருட் செல்வம்.....

(1ம் பக்கத்து வளர்ச்சி)

திருமுறைஓதும் சிவனடியார்கள் தரும்பண்ணிசையின்பமும் நாதக்கலை நாதர்கள் கூட்டமும் இசையின்பமும புராணங்கள் புகழும் கிம்புருநாரதர்களின் கீதஇன்பம் எவ்வாறிருக்கும் என்றெருவாறுணர்வர்;

தொண்டுபுரிந்த துர்க்காதேவியின் திருத்தலத்தின் தூய்மையைப் பேணிக்காக்கும் அன்பாளர் கூட்டத்தின் அயராத் தொண்டினை உற்று நோக்குவோர் துர்க்காசூழலிலே தெய்விக மின்சக்தி நிலவுவதென்றறிவர்.

இவற்றுக்குமேலாக எண்ணுக் கடங்காப் பக்தர் கூட்டத்தின் அன்புப்பரவசம் துர்க்கையின் அருட்பிரவாகத்தை ஒலிபரப்பிக் கொண்டிருப்பதாகப் புலப்படுகிறது.

புத்தாண்டுப் பெருந்திரு நிகழ்ச்சியாகும் மகாகும்ப அபிஷேகம் சித்திரைத்திங்கள் ஐந்தாம்நாள் உத்தரநட்சத்திர உத்தம வேளையில் நடைபெறும் பொழுது இந்நாடு இன்னல் நீங்கிப் புனர்வாழ்வு பெறும் தெய்வீக ஆணையையும் பெறும்.

ஒரேவேளையில் ஐந்து வெவ்வேறு கும்பாபிஷேகங்கள் பொலிவதும் அவற்றுள் ஒன்று இராசகோபுரமகா அபிஷேகமாவதும் ஒரு பரிபூரணத்திருவிழாவாகும்.

அம்பாள் அருள்மிகும் ஆலயத் தின்மகா
கும்பா பிஷேகம் கொடைஅடியார் — தம்பால்
துயர்கள் துடைக்கின்ற துர்க்கை திருவின்
செயல்கண் டுலகுய்யும் தேர்

## மாற்றுக் கட்சியும் மரியாதை செலுத்தும் அமரர் கதிரைவேற்பிள்ளை

சட்ட அறிஞர் இராச. இராசேஸ்வரன் தங்கராஜா அவர்கள் கூறுவது,

காலஞ் சென்ற கதிரவேற்பிள்ளை அவர்கள் எமக்கு மாற்றுக் கட்சியைச் சேர்ந்த மல்லிகைப்பூ ஆவார். அதன் நறுமணத்தின் பெருமையை ஒருவராலும் மறுக்க முடியாது.

அரசியல் துறையில் ஆற்றலும் நேர்மையும் அஞ்சாமையும் அடக்கமும் கொண்டவர்.

சட்டத் துறையில் சாதுரியம் மிக்கவராய் உச்ச நிலையில் இருந்தார். அவரின் கீழ் சட்டம் பயில எனக்கு சொந்தமாகக் கிடைத்த சந்தர்ப்பத்தை ஒரு பாக்கியமாக நான் கருதுகிறேன்.

இலட்சியத்தைக் கை விடாமல் நேர் நிலையில் நின்றவர் தன்னுடைய நிலை தழும்பாத தன்மையால் நமது சமுதாயத்தில் அல்லற்படும் இளைஞர் பரம்பரையினருக்கு விடிவெள்ளியாக விளங்கியவர் அன்னரின் சடுதியான மறைவு தமிழ் மக்களுக்கும் அவரை அங்கத்தவராகக் கொண்ட இயக்கத்துக்கும் ஈடு செய்யமுடியாத இழப்பாகும்.

அன்னரது ஆன்மா சாந்தியடையவும் அவரது குடும்பத்தினரைப் பாதுகாக்கவும் நிலை தழும்பாத தலைவர்களைத் தோற்றுவிக்கவும் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

## ஈழகேசரி பொன்னையா நினைவு விழா

பங்குனி மாதம் 18ஆம் திகதி (31-3-81) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5மணிக்குச்சன்மார்க்க சபை மண்டபத்தில் வள்ளலும், பிரபுவுமான ஈழகேசரி நா-பொன்னையா அவர்களின் 30ஆம் ஆண்டு நினைவு விழா சன்மார்க்க சபைத் தலைவர் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, பி.ஏ அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தேவாரம், கட்டுப் பிரார்த்தனை ஓதுவா மூர்த்தி திரு.வி. சுப்பிரமணியமும் அவரது மாணவர்களும் நிகழ்த்தினர்.

பிரதம விருந்தினர் திரு ச அம்பிகைபாகன், பி ஏ அவர்கள் (யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய முன்னுள் அதிபர்) நினைவு நாள் உரை நிகழ்த்தினர் இலக்கிய வளர்ச்சியில் 'ஈழகேசரி' பற்றி பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்கள், உப அதிபர் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை, இன்றைய சிந்தனையில் ஈழகேசரி பற்றி திரு.நா.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் M.A விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம் (தமிழ்ப் பிரிவு) இன்றைய இலக்கியத்தின் தேவை என்ன? என்பது பற்றி திரு. கதிரேசர்பிள்ளை ஆதவன் அவர்கள் B.A [சிறப்பு] விரிவுரையாளர். யாழ் பல்கலைக்கழக உரைகள் ஆற்றினர்.

## Letter to the Editor

(continued from page 4)

ing that God will help us, our languag·, our culture and ideals is highly dengerous for our future. God helps those who try to do their duty and help themselves; and if we fail in our duty, might leave us to reape our Karma; and what happeaed to many races and civilizations in the past, owing to the conduct of people owing allegiance to certain ideals, could happen to us also. We are subject to Divine Will and the Law of Karma. No class or section of humanity is immortal. The only ultimate safeguard is obedience to God by the performance of our duties, selfless, unceasing and perpetual.

Hindu Organ

Friday, 3, 10-4-81

## NOTHING IS SECURE! NOT EVEN THE SECURITY SERVICE!!

The people of the North having become utterly perplexed by the recent happenings, in the Peninsula, of robbery in broad daylight under the very nose of the patroling police now begin to realize that life is beset with lurking danger.

The highway robberies which are depicted discriptive stories pale into insignificance before the planned plunderings that took place at three places close to one another within the all too short space of a few months.

What is intriguing about these daring banditry is that circumstances had been so favourable to the culprits as to give them the maximum possibility of a successful operation.

In other words the "great robbery" could have been avoided if only the transporters of large sums of money could have taken adequate precautions against waylaying.

But that is not the only item that remains inexplicable! For a gang to operate with imprudence along the high-roads and by-roads scorning police authority and taking full control of the handling of traffic, it must be a country where law and order cannot be maintained.

The latest act of gangsterism is almost the seventh in the series. Several such robberies and killings had been commitied in the preceding seven years. And so far no lesson worth theword has been learnt by those who are responsible for maintaining law and order.

## Letter to the Editor

*(By Sri S. Sivasubramaniam)*
*Life Member,*
*Jaffna Saiva Paripalana Sabhai.*

Reports and summaries of the proceedings of the International Association of Tamil Research held at the ancient city of Madurai have been published in the columns of your esteemed Journal. References have also been made to Rev. Father Xavier S. Thaninayagam, one of the chief founders of the Conference. It is very gratifying that in addition to such complimentary references, tribute has been paid to his cherished memory by erecting a statue in his honour along with statues of certain other eminent savants. It is our duty to reiterate that expression of gratitude to Father Thaninayagam who was one of the greatest Tamils and scholars during recent times. Further, it is appropriate to record our thanks to the Roman Catholic Church of which the Reverend Father was a Clergyman and the ancient family to which he belonged.

This Conference appears to have been an unprecedented success greatly due to the efforts of the Chief Minister of Madras Shri. M G. Ramachandran and his colleagues and other co-workers and participants. Nothing in this world is perfect so that if certain critical comments are made by some well meaning individuals, we may take same as evidence of the imperfection of events and things and everything human. Owing to illness, I could not attend the event, though I happen to be associated with the movement from its inception as one of its co-founders, as well as that of the Tamil University Movement and Tamil Cultural Society and All Ceylon Tamil Congress.

While associating myself with the observations contained in Father Thaninayagam's learned discourse, I venture humbly to make the following submissions for gracious consideration by all concerned including the worker of the Ceylon brother's Congress and your goodself.

1 The continuation of the International Association, of Tamil Research is a very great necessity in the realms of culture knowledge and intellectual and social progress.

2 Side by side with the said Association, the revival of the valuable Journal "Tamil Culture" founded by Father Thaninayagam and others, and by the Tamil Cultural Society of which the late Justice C. Nagalingam, Q. C. (who functioned as Chief Justice and Governor-General of SriLanka) was President is also a great necessity. Versions of this Journal in Sinhala and Tamil and other languages are also required.

3 It is equally desirable that the Tamil Cultural Society be revived in Sri Lanka.

4 It is also desirable that wherever Tamil speaking people are found in any part of the world Clubs or Organizations are formed, even in an informal manner to promote Tamil learning, knowledge, ideals and culture.

5 Further no harm could accrue to have also a World Organization to spread Tamil culture, language, ideals and thus serve the world as well. Our ancients have uttered the following immortal words.

"The whole world is our Country, Every Man 's our brother"

Even for the promotion of Tamil Research anywhere either in any locality or throughout the World, a wide background of Tamil learning and Culture with innumerable adherents and supporters in every manner possible is an absolute necessity. No Research of any kind could be done in any walk of life or branch of knowledge without the necessary background and foundation of the elements or rudiments of knowledge in that particular field and without moral and material aid from all quarters to the maximum degree.

6 In addition to such Organization, the great desirability, nay the necessity, to have a Tamil Organization to promote the general welfare of Tamil speaking people and on their behalf to render service in all directions to the rest of the World appears eminently appropriate, desirable and necessary.

The World is a changing world, changing from day to day; the thoughts and activities of individuals, of countries and nations are also changing. The Tamil speaking people cannot remain isolated like an Island. A medium to think over and express our ideas, opinions and ideals to the rest of the World on all matters wherever necessary is a paramount need It is only if the Tamil speaking people in all parts of the world are in a happy, enlightened and safe condition of security that Tamil culture, language and learning and research can flourish or even have normal existence. It is not possible to build a house or palace without bricks and stones; it is not possible to paint a picture without a suitable canvas in existence. An old Tamil saying comes to my mind.

"சுவர் இருந்தால்
சித்திரம் எழுதலாம்"

"There can be no painting without a wall"

These submissions are made while I reiterate my deffinite opinion that a solution of the problem relating to Indians in Sri Lanka, including the so-called "Stateless Persons the majority of all of whom are Tamil speaking, the incorporation of Tamil language as an Official Language along with Sinhala and English for use in all parts of the country and out of Sri Lanka on an identical basis and certain important constitutional changes are required not only in the interests of the country and international welfare but also for the preservation of Tamil language and culture. The present set up with Mr. J. R. Jayawardene as President andMr. R. Premadasa as Prime Minister could be taken as a welcome interim meas ure under prevailing circumstances and conditions by reason of the leaders concerned being at the helm of affairs and as a temporary expedient in a grave period of transition, both internal and external; leaders are also mortal beings subject to the normal rules of human existence I venture to make this statement with the utmost deference to the pre-eminent leaders referred to and other leaders in and outside the National State Assembly.

I humbly earnestly feel that it is not necessary to elaborate the point further. These Organizations.

(a) International Tamil Research Conference.

(b) The Tamil Cultural Society.

(c) World Council for International and Tamil Affairs and

(d) A Daily Press in Sri Lanka conducted by Tamil Agencies in the three languages, Sinhala English and Tamil is also an absolute and urgent necessity for the promotion of Tamil Language and Tamil Culture and for the welfare of the Tamil speaking people and of the entire country as a whole and for conveying the thoughts and ideas to the Comity of the Nations.

These can co-exist together, helping one another mutually in cooperation and serving not only the Tamil speaking people but the entire world in keeping with the highest ideals of Tamil Culture and of the Religions, irrespective of race denomination. The times and circumstances and conditions the world is passing through and the looming future, merit such combind activity in the service of all mankind. Remaining complacent with over-confidence and pride and without doing our duty and say.

(continued in page 3)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோனமுறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna (Telephone: 356) on Friday, 3. 10-4-1981*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam